C.C.No. 115/2022
நாள்: 22.02.2024
நேரம்: 12.15

P.W– 1:முனீஸ்வரி , க/பெ. முனியாண்டி

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாண வாக்குமூலம் செய்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடைபெற்ற அன்று தான் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சிகளை நான் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றேன் என்றால் இல்லை. புகார் கொடுத்த அன்று போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் 2 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் 2, 3 கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். நான் கையெழுத்து போடும் போது எனது கணவர் பெயரை சேர்த்து கையொப்பம் செய்வேனா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் 4 ம் எதிரி கோனீஸ்வரியை எனது கணவர் அசிங்கமாக பேசுவதாக 1ம் எதிரி என்னிடம் சொன்னதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்தபோது மருத்துவரிடம் கண் ஆப்ரேஷன் செய்ததை சொன்னேனா என்றால் இல்லை. சம்பவத்திற்கு முன்பே கண் ஆப்ரேஷன் செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால் இரவு 8, 9 மணி இருக்கும். நான் மருத்துவமனைக்கு எதில் சென்றேன் என்றால் 108 ல் சென்றேன். மருத்துவமனைக்கு எப்போது சென்றடைந்தேன் என்றால் 10, 11 மணி இருக்கும். நான் மயக்கமான நிலையில் இருந்ததால் மருத்துவரை பார்க்கவில்லை என்றால் சரியல்ல, பார்த்தேன், எனக்கு எக்ஸ்ரே, ஸ்கேன் எடுக்கப்பட்டது.

எதிரிகள் எனது மகனையும், கணவரையும் அடித்ததாக முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள நிலையில் எனது மகனும், கணவரும் எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் நகலை நான் பெற்றுக் கொண்டேன் என்றால் அதை பற்றி தெரியாது. எதிரிகள் என்னை சைக்கிளை வைத்து அடித்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த சைக்கிளை போலிசாரிடம் காட்டினேனா என்றால் இல்லை. நான் கண் ஆப்ரேஷன் செய்துள்ளதால் அடிக்கடி மருத்துவமனைக்கு சென்று வருவது இயல்பு என்றால் சரிதான். நான் மருத்துவரிடம் எதிரிகள் எங்கெங்கு அடித்தார்கள் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் காளிதாஸ், பாக்கீஸ்வரி ஆகியோர்கள் இவ்வழக்கில் பிறழ்சாட்சியும் அளித்துள்ளார்கள் என்றாலும் இந்த வழக்கானது பொய்யானது என்பதால் தான் அவ்வாறு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்கும்,

எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரிகளும் நாங்களும் வெவ்வேறு கட்சியை சார்ந்தவர்கள் என்பதால் தேர்தல் பகை காரணமாக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.02.22 16:08:42 +0530